* 241 Q.—THIRU N. KASIRAMAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state:

(a) whether the Government have passed orders fixing the scales and emoluments payable to the staff of the Government Arts and Training Colleges in accordance with the scale recommended by the University Grants Commission;

(b) whether this scale of pay will be applicable even to the teaching staff of the educational department who are for the present working in the professional colleges on deputation; and

(c) the total number of teaching staff of the Arts Colleges and Teachers' Training Colleges working in the professional colleges?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) 211.

DR. H. V. HANDE: The State Government is expecting reply from the Centre. In the meantime, will the Government be prepared, so far as these lecturers are concerned, to issue orders so that these arts and science people working in professional colleges will be given the same facilities as regular professional college lecturers?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : என்னுடைய பதிலிலேயே கடைசி பதிலாக அதைத்தான் சொன்னேன். அவர்கள் உத்தரவை நாம் அமல்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், மானியம் பெற்றுவரும் தனியார் துறை கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஓய்வு கால ஊதியம் வழங்கும்பொழுது அவர்கள் ஹைஸ்கூல்களிலே பணியாற்றி இருந்தாலும், அந்தக் காலத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று டைரக்டர் ஆப் காலேஜியட் எஜுகேஷன் கேட்டுள்ளார்கள். அப்படி உத்தரவு பிறப்பிக்காததன் காரணமாக ஏராளமான ஆசிரியர்களின் ஓய்வு கால ஊதியம் நிர்ணயம் செய்யப்படாமல் உள்ளது. எனவே, அரசாங்கம் உடனடியாக அந்த உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. எய்டெட் ஸ்கூல்ஸ், கவர்ன்மென்ட் ஸ்கூல்ஸ் என்று வெவ்வேறு இடத்திலே பணியாற்றினாலும் எடுத்துக் கொள்ளப்படுமா ? கல்லூரிகளிலே பணியாற்றினாலும் எடுத்துக்கொள்ளப்படுமா என்பது போன்ற பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன. அரசாங்கம் அதையெல்லாம் பரிசீலனை செய்து முடிவு எடுக்கும்.

திரு. பெ. மலைச்சாமி : தனியார் பள்ளிகளிலே ஆசிரியர்களுக்குப் பல்கலைக் கழகம் நிர்ணயித்துள்ள சம்பளம் கிடைக்கவில்லை என்பது உண்மையா ? அதுபற்றி அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : குறிப்பிட்டு எந்தக் கல்லூரியில் என்று எழுதியனுப்பினால் பரிசீலிக்கலாம்.

திரு. க. ந. இராமச்சந்திரன் : மாவட்ட மன்றங்களிலே உள்ள உயர்நிலைப் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற பி. டி. ஆசிரியர்களுக்கு பே ஃபிக்ஸேஷன் செய்யப்படுவதில்லை என்று சொல்கிறார்கள். எப்பொழுது அது நிறைவேற்றப்படுமென்று அறிய விரும்புகிறேன்.